www.freetnbooks.com

**TVL11T**

திருநெல்வேலி மாவட்டம்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

வகுப்பு 11

காலஅளவு: 3.00 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **14×1=14**

1) அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது
அ) நம்பிக்கை ஆ) பெருமிதம் இ) புகழ் ஈ) அச்சம்

2) "கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" **- அடி மோனையைத் தெரிவு செய்க.**
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

3) 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' - யார் யாரிடம் கூறியது?
அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

4) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை .............
அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்
(i) அ - மட்டும் சரி (ii) ஆ - மட்டும் சரி
(iii) இரண்டும் சரி (iv) அ-தவறு, ஆ-சரி

5) ஒப்புரவு என்பதன் பொருள் .............
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

6) 'சின்னச்சீறா' என்ற நூலின் ஆசிரியர் .............
அ) பனு அகமது மரைக்காயர் ஆ) சீதக்காதி
இ) அபுல் காசிம் ஈ) கம்பர்

7) 'போது' என்ற சொல் உணர்த்தும் பொருள் .............
அ) போதும் ஆ) காடு இ) மொட்டு ஈ) மேகம்

8) ஐங்குறுநூற்றின் மருதத் திணைப் பாடல்களைப் பாடியவர் .............
அ) அம்மூவனார் ஆ) ஓரம்போகியார் இ) கபிலர் ஈ) ஔவையார்

9) பிழைத் திருத்தத்தில் Dt இக்குறியீடு உணர்த்தும் பொருள்
அ) ஒற்றை மேற்கோள் குறியிடுக.
ஆ) தடித்த எழுத்தில் மாற்றுக.
இ) சொற்களுக்கிடையே இடைவெளி தருக.
ஈ) சொல்லையோ எழுத்தையோ நீக்குக.

10) **சரியானதைத் தேர்ந்தெடுக்க:**
அ) வரை - மலை ஆ) வதுவை - திருமணம்
இ) வாரணம் - யானை ஈ) புடவி - கடல்
i) அ, ஆ, இ - சரி; ஈ - தவறு ii) ஆ, இ, ஈ - சரி; அ - தவறு
iii) அ, இ, ஈ - சரி; ஆ - தவறு iv) அ, ஆ, ஈ - சரி; இ - தவறு

11) "திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்துபோன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைந்துவிடுகிறது" - இவ்வரிகள் உணர்த்தும் கருத்து
அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.
ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியைத் திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.
இ) எழுத்துமொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.
ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com


12) **கூற்று** : மாணவர்கள் பள்ளியில் பயில்கின்றபோதே கூடுதல் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**காரணம்** : இத்திறன்கள் எதிர்காலத்தில் மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

அ) கூற்று தவறு; காரணம் சரி. ஆ) கூற்று சரி; காரணம் சரி.

இ) கூற்று சரி; காரணம் தவறு. ஈ) கூற்று தவறு; காரணம் தவறு.

13) **சரியான தொடரைத் தெரிவு செய்க:**

அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.

ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.

ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.

14) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க:**

| | | |
|---|---|---|
| அ) வெள்ளிவீதியார் | - | 1. தமிழ் நெடுஞ்சாலை |
| ஆ) அண்ணாமலையார் | - | 2. வாடிவாசல் |
| இ) சி.சு. செல்லப்பா | - | 3. குறுந்தொகை |
| ஈ) ஆர். பாலகிருஷ்ணன் | - | 4. காவடிச்சிந்து |

அ) 3, 1, 2, 4 ஆ) 2, 4, 1, 3 இ) 3, 4, 2, 1 ஈ) 3, 4, 1, 2

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×2=6**

15) மருத்துவத்தின் பிரிவுகளாக குறள் கூறுவன யாவை?

16) உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

17) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

18) ''கற்றேன் என்பாய் கற்றாயா?'' என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

19) ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை?

20) 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

21) 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** **7×2=14**

22) **மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:**

அ) மதில்மேல் பூனை **(அல்லது)** ஆ) முதலைக் கண்ணீர்

23) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**

அ) அறிவில்லாதவன் **(அல்லது)** ஆ) நஞ்சிருக்கும்

24) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**

அ) கனை, கணை **(அல்லது)** ஆ) உலை, உளை, உழை

25) **பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**

காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

26) **கீழ்க்காணும் தொடரை வினாத் தொடராக்குக:**

தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.

27) **எவையேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) ஆழ்க ஆ) மலிந்த

28) **எவையேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**

அ) உயர்ந்தோங்கும் ஆ) நீரோடை

29) **கீழ்க்காணும் இரண்டனுக்கும் தமிழ்க் கலைச்சொல் தருக:**

அ) Translator ஆ) Book Review

30) திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக.

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×4=8**

31) அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?

32) தமிழ்ப்பண்பாட்டின் ஓர் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

33) எண்ணியதை அடைதல் எப்போது எளிதாகும்? குறள் கருத்தை விளக்குக.

34) ''சேரநாடு செல்வ வளம் மிக்கது'' என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×4=8**

35) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

36) கவிதை ஒரு படைப்புச் செயல்பாடு என்பதை விளக்குக.

37) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.

38) சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×4=12**

39) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின் - என்னும் குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**(அல்லது)**

பிறிது மொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.

40) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

41) **இலக்கிய நயம் பாராட்டுக: (மையக்கருத்துடன் எவையேனும் மூன்று நயங்களை எழுதுக)**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

**- நாமக்கல் கவிஞர்**

42) **புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**
**(கம்பு, மை, வளை, மதி, ஆழி)**

1. எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் ................
2. சிலம்பம் சுற்றலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ................
3. கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம் ................
4. அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவேதான் ................

43) **தமிழாக்கம் தருக:**

1. Education is the most powerful weapon, which you can use to change the world.
2. Looking at beauty in the world is the first step of purifying the mind.
3. People without the knowledge of their past history and culture are like trees without roots.
4. A nation's culture resides in the hearts and in the soul of its people.

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



43) **காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.**

**கீழ்க்காணும் பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:**

செந்தமிழ்ச் செம்மல் 'டாக்டர் ஜி.யு.போப்', 1839 ஆம் ஆண்டில், தென்னிந்தியாவுக்கு வந்தார். சென்னையை அடைந்த போப், 'சாந்தோம்' என்னும் இடத்தில் முதன்முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார். ஆங்கிலேயரான அவரின் தமிழுரை கூடியிருந்த தமிழர்களுக்குப் பெருவியப்பளித்தது. தமிழ் மொழியைப் பயிலத் தொடங்கிய சிறிது காலத்திலேயே, ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவரது திருக்குறள், திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்புகள் சிறப்பு வாய்ந்தவை.

போப் அவர்கள் தஞ்சாவூரில் வாழ்ந்தபோது, தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தெளிவுற அறிந்தார். அப்போதுதான் தொல்காப்பியம், நன்னூல் முதலிய பேரிலக்கண நூல்களைப் பாடசாலை மாணவர் படிப்பது எளிதன்று என்பதைக் கண்டு, சிறிய தமிழ் இலக்கண நூல்கள் சிலவற்றை எழுதி வெளியிட்டார். ஐரோப்பியர், தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்குரிய நூல் ஒன்றை (தமிழ்க் கையேடு) எழுதினார். ஆங்கில மொழியில் எழுதப் பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை, தமிழில் எழுதிப் பதிப்பித்தார். பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகைய கல்வியே பயனளிக்குமென்றும் போப் கருதினார். எழுபது ஆண்டுகள் தமிழோடு வாழ்ந்திருந்து, தமிழுக்கு நலம் செய்த பெரியார் ஜி.யு.போப் ஆவார்.

**வினாக்கள்:**

1. ஜி.யு.போப் தென்னிந்தியாவுக்கு வந்த ஆண்டு யாது?
2. தமிழ்க் கையேட்டை ஜி.யு.போப் எழுதக் காரணம் யாது?
3. போப், எத்தகைய கல்வி பயனளிக்கும் எனக் குறிப்பிடுகிறார்?
4. ஜி.யு.போப் முதன்முதலாக உரையாற்றிய இடம் எது?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **3×6=18**

44) அ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

**(அல்லது)**

ஆ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம்வழி நிறுவுக.

45) அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) சுந்தர ராமசாமியின் 'காற்றில் கலந்த பேரோசை' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46) அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) தமிழ்மொழிக்கு அயல்நாட்டவர்கள் ஆற்றிய அரும்பணிகளைத் தொகுத்துரைக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக:**

47) அ) 'சிற்றூரும்' - எனத் தொடங்கும் புரட்சிக்கவிப் பாடலை எழுதுக. **1×4=4**

ஆ) 'வடு' - என முடியும் குறளை எழுதுக. **1×2=2**

www.freetnbooks.com | FREETNBOOKS